1995 மார்ச் 29]

திரு. எஸ். ஆண்டி அம்பலம்: பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்புத் திட்டம் என்ன என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே வருகின்ற சுற்றுலாப்பயணிகள் தங்கிச் செல்வதற்கும், அப்படித் தங்குகின்ற காலகட்டங்களிலே பொழுது போக்கிற்காக நீர்வீழ்ச்சியில் நீராடுவதோடு மட்டுமல்லாமல், இறைவழிபாட்டுக்காக, சிவன் கோவில் ஒன்றும், விஷ்ணு கோவில் ஒன்றும் உள்ளன. முதலைப் பண்ணை மற்றும் சிறு மிருகக் காட்சி சாலை ஒன்றும் உள்ளன. அங்கே செல்லுகின்ற மக்களுக்கு குளியல் படித்துறை வசதி, நீர்வீழ்ச்சிக்குச் செல்லுகின்ற நடைபாலம், காவிரி நதியில் தீவுப் பகுதிக்குச் செல்லக்கூடிய பாதையைச் செப்பனிடுவதோடு, அங்கே ஒரு நடை மேடை அமைக்கக் கூடிய கருத்துரு, பேருந்து நிலையத்திற்கு அருகில் இசைக்கேற்ப நடனமாடும் நீருற்று அமைப்பதற்கானத் திட்டம், அருவிக்கரை அருகில் படித்துறைக்குச் செல்லும் வழியில் படிகள் அமைத்தல் ஆகிய சிறப்புத் திட்டங்கள் அரசினுடைய பரிசீலனையில் உள்ளன.

152—

தாவர எண்ணெய் இரண்டாவது விற்பனைக்கு வரி

16452—**திரு. செ.து. வரதராஜன்:**

மாண்புமிகு வணிகவரிகள்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாவர எண்ணெய் வியாபாரிகள் பினாமிகளுக்கு விற்பனை செய்து விட்டு, அது முதல் விற்பனை என்றும் பின்னர் செய்யப்படுவது இரண்டாவது விற்பனை என்பதால் விற்பனை வரி செலுத்தாமல் இருப்பதாக அரசுக்கு புகார்கள் வந்துள்ளனவா?

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிகவரிகள் துறை அமைச்சர்:

தாவர எண்ணெய் வியாபாரத்தில் செய்யப்படும் வரி ஏய்ப்புகள் குறித்த புகார்கள் பெறப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்).